பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 132

திங்கட்கிழமை
07 ஏப்ரல் 2025

பங்குனி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


## உள்ளூராட்சித் தேர்தல் 712 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப்.7
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பாக நேற்றுமுன்தினம்வரை 712 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று

11

யாழ்ப்பாண மாவட்டத்தில்

# இரண்டு சபைகளுக்கே வாக்காளர் அட்டைகள்

## நீதிமன்ற அறிவுறுத்தலின் பின்பே ஏனையவற்றுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

**தபால்மூல வாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இரு உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே தற்போது தபால்மூல வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. ஏனைய உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக நீதிமன்றங்களின் அறிவுறுத்தல்கள் கிடைத்ததும் தபால் மூல வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தெரிவித்தார்.**

11

## 114 சபைகளுக்கு சிக்கல் இல்லை!

கொழும்பு, ஏப்.7
உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, நீதிமன்றத் தடைகள் இல்லாத 114 உள்ளூராட்சிசபைகளுக்கு மட்டுமே வாக்காளர் அட்டைகள் விநியோகிக் கப்படும் என்று தெரிவித்துள்

11



## மஹாபோதியை வழிபட்ட மோடி!

கொழும்பு, ஏப்.7
இலங்கை வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் அநுராதபுரத்துக்குச் சென்று, ஜய ஸ்ரீ மஹாபோதியில் வழிபாட்டில்

11

## அமெ. வரிச்சிக்கலைத் தீர்க்க இந்தியாவை நாடிய இலங்கை

### தொழில் அமைச்சர் அனில் ஜயந்த தகவல்



கொழும்பு, ஏப்.7
அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் அரசாங்கம் தீர்வைக் கோரியிருந்தது. அதற்குச் சாதகமான பதில் கிடைத்துள்ளது என்று தொழில் அமைச்சரும், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கை இலங்கையை எவ்வாறு பாதிக்கும்

11



## போதை மாத்திரைகளோடு யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஏப்.7
போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்

11



## தே.ம.சக்தி எம்.பி. மாரடைப்பால் மரணம்

விரிவு பக்.11

## இந்தியா திரும்பினார் மோடி

கொழும்பு, ஏப்.7
இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு

11

முச்சந்தி முரளி



‘நாலுதரம் வாறது முக்கியமில்லை, நல்லது நடக்கிறதுதான் முக்கியம் கண்டியளோ’



## சட்டவிரோத மது விற்பனை; கண்டித்து நேற்றுக் கவனவீர்ப்பு!

முல்லைத்தீவு, ஏப்.7
புதுக்குடியிருப்பு, மாணிக்கபுரம் கிராமத்தில் நடக்கும் சட்டவிரோத மதுபான விற்பனையைக் கட்டுப்படுத்த வலியுறுத்திக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய கிராம மக்கள், சில வீடுகளின் கதவுகளில் “உழைத்து வாழப் பழகு, ஊரை அழித்து வாழாதே” என்று சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளனர்.

11

## “அரசியல் பழிவாங்கல்” பயன்படுத்தினால் சிக்கல்

கொழும்பு, ஏப்.7
அரசியல்வாதிகள் அரசியல் பழிவாங்கல் என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று இலஞ்ச, ஊழல் தொடர்பான புலனாய்வுப் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க தெரிவித்துள்ளார். இலஞ்ச ஊழல் பற்றிய புலனாய்வு அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அரசியல் பழி

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4040
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 05 38 49 73
விசேட எழுத்து T

**ஹந்தஹரனை ராசி சுப பலன்**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1107
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 35 36 38 45

**NLB ஜய**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0066
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 4 9 5 3

**மெகா பவர்**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2146
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 31 34 46 62

**மஹஜன சம்பத**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5798
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 6 5 6 9 1 0

**தன நிதானய**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1828
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 02 16 25 76
விசேட எழுத்து B

**அத சம்பத**
திகதி 06.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0373
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 6 9 1 0

# காற்றாலைத்திட்டம் அபிவிருத்திக்கே!

## மோடி கூறியதாக சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

காற்றாலை போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு - கிழக்கை மேம்படுத்த உதவும் என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.


மோடியுடனான தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டாரென புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கில் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு இன்றி இருக்கின்ற நிலையில் இந்தியா மிகப்பெரிய பொருளாதார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

தற்போது காற்றாலை போன்ற பொருளாதாரம் சார்ந்த விருத்தித்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இதனூடாக எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்களின் மூலம் வடக்கு - கிழக்குவாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறும் என்றும் இந்தியப் பிரதமர் மோடி கூறியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-125)

# மக்கள் சந்திப்பு

மன்னார், ஏப். 7

தேசிய மக்கள் சக்தியின் நானாட்டான் பிரதேசசபைத் தேர்தலுக்கான வாழ்க்கை பெற்றான் கண்டல் வட்டார உறுப்பினர்களை ஆதரித்து, மக்கள் சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (ச-41-56)



# உரிமைகளைக் காக்க வீட்டுக்கு வாக்கிடுவோம்

## சி.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

**எமக்கான மொழி, மத உரிமைகளைப் பேணுவதற்கு எம்மவர்கள் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும் என்று கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டத்துக்கான வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசு கட்சியினுடைய சின்னம் வீடு. அது வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும் தெரியும் . வீட்டுக்கு நேரே மட்டுமே நீங்கள் புள்ளடியிடவேண்டும்.

சிலர் ஒரு மாயைத் தோற்றத்தின் காரணமாக திசை மாறித் தடுமாறி வாக்களிக்கின்றனர். இந்த அரசாங்கத்தினுடைய கோட்பாடுகள் எமக்கு தெள்ளத்தெளிவாகத் தெரிகின்றது.. எமக்கான மொழி, மத உரிமைகளை பேணவேண்டும். அதற்காக மாற்றுத்திசையிலே நாங்கள் போகக்கூடாது. நாம் அனைவரும் இணைந்து உலகுக்கும் சமூகத்துக்கும் ஒரு விடயத்தைச் சொல்லவேண்டும் - என்றார். (ச-125)

**சுபிரி தன சம்பத**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0506
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 0 7 4 1 9 3

**Super Ball**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2772
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கம் 04 38 51 72

**சனிதா**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 51 60 71 73
வெற்றி வாரம் 4933

**SASIRI**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0659
வெற்றி இலக்கம் 13 32 42

**லக்ன ராசி**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
மேஷம்
வெற்றி இலக்கம் 01 10 33 35
சீட்டிழுப்பு வாரம் 4484

**KAPRUKA**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கம் 19 25 49 58
வெற்றி வாரம் 1948

**அத கோடிபதி**
திகதி 06.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 10 16 20 39
வெற்றி வாரம் 2598



# மோடிக்கு அநுர சிறப்பு விருந்து

கொழும்பு, ஏப். 7

இலங்கைக்கு அரச பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதியால் சிறப்பு இரவு விருந்து வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர். (ச-இ)

# ட்ரம்பின் வரிவிதிப்பு பட்ஜெட்டைத் திருத்துங்கள்

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7

வரிவிதிப்புத் தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுகள் வெற்றிபெறவில்லை எனில் அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தைத் திருத்தி ஏற்றுமதிவருவாயைப் பராமரிக்க மாற்றுத்தீர்வுகளைத் தேட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைப் பொருள்களுக்கு 44 வீத வரி விதிக்க அமெரிக்கா எடுத்த முடிவைத் தொடர்ந்து இலங்கை பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ளது.

அனைத்து அரசியற்கட்சிகளும் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் ஒன்றுபடவேண்டும்.

இந்த வரிகள் ஆடை போன்ற பிரதான துறைகளைக் கடுமையாகப் பாதிக்கும். வேலையின்மை அதிகரிக்க வழிவகுக்கும்.

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் மீண்டுவருவதால், அரசாங்கத்தின் ஏற்றுமதி இலக்குகள் இப்போது ஆபத்தில் உள்ளன. இதனால் பொருளாதார மீட்சி இன்னும் கடினமாகிறது.

எனவே இந்தச் சவாலை சமாளிக்க ஒற்றுமை அவசியம்- என்றார். (ச-இ)

# தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 7

எதிர்வரும் ஏப்ரல் 20ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உயிர்த்த ஞாயிறுதினப் பண்டிகையை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இல்லத்துக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், கட்டுவாபிட்டியாவிலுள்ள புனித செபஸ்தியன் தேவாலயம் மற்றும் மட்டக்களப்பில் உள்ள சியோன் தேவாலயம் என்பனவற்றுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் காவலில் இளைஞன் சாவு பாரபட்சமற்று விசாரணை நடத்துக

சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 7**

**கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி அதிகாலை வெலிக்கடை சிறைச்சாலையின் தடுப்புக்காவலில் இருந்தபோது இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ராஜீவ் அமரசூரிய தெரிவிக்கையில்,

பொலிஸ் காவலில் இருந்தபோது அந்த இளைஞர் உயிருக்கு ஆபத்தான காயங்களைச் சந்தித்தாரெனக் கூறப்படுகிறது. இளைஞர் தனக்குத் தானே காயங்களை ஏற்படுத்திக் கொண்டார் எனவும் அந்த நேரத்தில் அவர் சரியான மன நிலையில் இல்லை என்றும் வெலிக்கடை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடுமையான காயங்களுக்கு உள்ளான இளைஞன் முல்லேரியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையின் போதே உயிரிழந்துள்ளார். இதுகுறித்து அறிக்கையிடப்பட்ட சூழ்நிலைகள் மற்றும் சட்ட அமுலாக்க பொறுப்புக்கூறல் மற்றும் பொது நம்பிக்கைமீதான பரந்த தாக்கங்கள் என்பவை அதிருப்தி ஏற்படுத்துகின்றன.

இது தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் உரிய நடைமுறை பின்பற்றப்படுவதையும் சட்டத்தின் ஆட்சி உறுதிசெய்யப்படுவதையும் உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

இந்த சம்பவம் குறித்து உடனடி மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படுவதை உறுதி செய்யுமாறு பதில் பொலிஸ்மா அதிபரை கேட்டுக்கொள்கின்றோம்- என்றார். (ச-இ)

# பெருந்தொகை போதைப்பொருள் இலங்கையில் முதற்தடவை மீட்பு



வரலாற்றில் மிகப்பெருந்தொகை போதைப்பொருள் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு பில்லியன் ரூபா மதிப்புள்ள ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் ஏழு கடற்றொழிலாளர்கள் ஆழ்கடலில் வைத்து கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கப்பலில் 51 உரப்பைகள், 700 கிலோகிராம் எடையுள்ள 500 ஐஸ் பொதிகள் மற்றும் 178 ஹெரோய்ன் பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சர்வதேச கிரிக்கெட் மைதானம் யாழில் அமைக்கவேண்டும்!

மோடியிடம் கோரியதாக சனத் ஜெயசூர்யா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்க இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் ஆதரவைக் கோரியதாக இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருக்கும் 1996 உலகக் கோப்பை வென்ற கிரிக்கெட் அணி உறுப்பினர்களுக்கும் இடையே கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது ஜெயசூர்யா இந்த வேண்டுகோளை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில்

முன்மொழியப்பட்ட இந்த மைதானம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிரிக்கெட்டை மேம்படுத்துவதில் பிரதான பங்கு வகிக்கும் என்று குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# ராஜகிரியவில் தீ விபத்து

கொழும்பு, ராஜகிரியவில் அமைந்துள்ள ஒரு பொழுது போக்கு இடத்தில் நேற்று நிகழ்வொன்றின்போது மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்தினால் குறித்த பகுதியில் இருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த அனர்த்தத்தில் உயிரிழப்பு ஏற்படவில்லை. எனினும், தீ விபத்துக் காரணமாக நிகழ்வு அரங்கில் பலத்த சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# புலியின் புகைப்படத்தை மோடிக்கு வழங்கிய சஜித்

கொழும்பு, ஏப். 7

இலங்கைக்கு விஜயம்மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளார். இதன்போது வில்பத்து தேசிய பூங்காவில் ஒருகண் பார்வை இழந்த பெண் புலியின் சிறப்பு புகைப்படத்தை, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்குப் பரிசளித்தார்.

ஒரு கண் பார்வை இழந்திருந்தாலும், காட்டின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு வாழும் இந்தச் சிறப்பான விலங்கு இலங்கையின் இயற்கை பாரம்பரியம் மற்றும் அழகின் உண்மையான சின்னமாகும் எனச் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ச-இ)






**கொ**ரோனா எப்ப பரவத் தொடங்கிச்சோ அதோட எங்கட சின்னப்பிள்ளையளின்ர நிம்மதியும் போட்டுது. கொரோனாவுக்கும் சின்னப் பிள்ளையளுக்கும் என்ன சம்பந்தம் எண்டு யோசிப்பியள். விசயமிருக்கு. கொரோனாவால வீட்டை விட்டு ஒருத்தரும் றோட்டுக்குக் கூட வர ஏலாத சூழலிலதான், பிள்ளையளின்ர படிப்புக் கெடக்கூடாது எண்டு 'சூம்' வகுப்புகள் தொடங்கினது. அதோட தொட்ட சனியன், கொரோனா இல்லாமல் போய், இந்தச் சனிமாற்றம் வந்தபிறகும்கூட துலையாமல் பிள்ளையளைப் பிடிச்சு ஆட்டுது. முந்தியெண்டால் பிள்ளையள் பள்ளிக்கூடத்துக்கும், ரியூசனுக்கும் போட்டுவந்து கொஞ்சநேரமெண்டாலும் வீட்டில நிம்மதியா இருப்பினம். ஆனால் உந்தச் சூம் வந்தபிறகு அதுக்கும் வழியில்லாமல் போட்டுது. வாத்திமாரும் இருந்த இடத்தில இருந்துகொண்டு உதைவைச்சு நல்லா உழைச்சு ருசி கண்டிட்டினம்.

அப்பிடியொரு வாத்தியார், 'கொலைசிப்' பிள்ளையளுக்குப் படிப்பிச்சு கொஞ்சம் பேமஸ். சூம் வகுப்பிலையே அவருக்குக் காசு கொட்டும். அதால பள்ளிக்கூட வாத்தியார் வேலைக்கு அஞ்சுவருச லீவைக் குடுத்திட்டு. முழுநேரமா சூமில கொலசிப் வகுப்புத்தான் குடுக்கிறார். முந்தித்தான் கொலசிப் எண்டா அஞ்சாம் ஆண்டில இருந்து படிப்பிப்பினம். இப்ப என்னெண்டால் நாலாம் ஆண்டிலேயே பள்ளிக்கூடங்களில பிள்ளையளை வேள்விக்கிடாய் மாதிரி 'கொலைசிப்' சோதினைக்கு ரெடி பண்ணத்தொடங்குகினம். இந்த வாத்தியாரோ இன்னும் அட்வான்ஸா போய், மூண்டாம் ஆண்டுப் பிள்ளையளுக்கே கொலைசிப் கிளாஸ் குடுக்கத் தொடங்கியிருக்கிறார். அப்பதானே நிறையப் பிள்ளையள் வருவினம், நிறையக் காசு வரும். வாத்தியாரும் கார், காணி எண்டு வாங்கிக்குவிக்கலாம்.

'அடியாத மாடு படியாது' எண்டதுதான் அவரின்ர படிப்பித்தல் பாணி. சூமில அவர் படிப்பிக்கிற நேரத்தைவிட 'நாயே பேயே,சனியனே' எண்டு பிள்ளையளைப் பேசுற நேரம்தான் கூட. நேர்ல படிப்பிச்சால் அப்பிடியே பிள்ளையளைக் கடிச்சுத் திண்டுடுவார் போல. அப்பிடியொரு கொலைவெறியோடதான் அவரின்ர சூம் வகுப்புகள் போகும். அப்பிடிப்பட்ட அந்த வாத்தியார் ஒரு உலகசாதனை படைச்சிருக்கிறார். 'உலகத் தொலைக்காட்சி வரலாற்றிலேயே முதன்முறையாக' எண்டு ரீவியில புதுப்படத்துக்கு போடுற விளம்பரத்தில வாற மாதிரியான ஒரு சாதனைதான் இதுவும். உலக சூம் வரலாற்றிலேயே முதன்முறையாக சூமில பிள்ளையளை தோப்புக்கரணம் போடவைச்சிருக்கிறார் இந்த வாத்தியார். இதைக் கேள்விப்பட்டால் 'சூம்' கொம்பனிக்காரனே ஏங்கிப்போடுவான். அப்பிடியொரு சாதனை. காசும் சுளையா வாங்கிக்கொண்டு, இப்பிடி சூமில பிள்ளையளை வதைக்கிறவைக்கு ஆர் நடவடிக்கை எடுப்பினம்? சூம் எண்டதால எங்களால ஒண்டும் செய்யேலாது எண்டு கைவிரிக்காமல், இப்பிடியான ஆக்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கையள் எடுக்காட்டி, உவையள் சூமில இன்னும் என்னென்ன கூத்துகள் ஆடுவினமெண்டு நினைக்கவே நடுங்குது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் தேவை களை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர் பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. காரி யங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். செலவு செய்யவேண்டி வரும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகை யில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அத னால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். மனதுக்கு உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். புதிய முயற்சி எதையும் தொடங்க வேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** காரிய அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முடிவுகள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும். உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். அலுவலகத்தில் உற்சாக மான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூ டும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரி யங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. பணிச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்க வும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்ப டக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். சலசலப்புகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். தொல்லைகள் நீங்கும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூல மாக முடியும். செலவு செய்யவேண்டி வரும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். புதிய ஆடை, ஆபர ணங்கள் வாங்கும் யோகம் உண்டு.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிற்சில சங்கடங்களைச் சமா ளிக்கவேண்டிவரும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

# ஹைதராபாத்தை வீழ்த்தியது குஜராத்



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற 20ஆவது லீக் ஆட் டத்தில் குஜராத் டைட்டன்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியை வீழ்த்தியது.**

ஹைதரபாத் ராஜீவ் காந்தி மைதானத்தில் நடை பெற்ற இந்த ஆட்டத்தில், நாணயச் சுழற்சியில் வெற் றிபெற்ற குஜராத் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

துடுப்பெடுத்தாட ஆரம்பித்த ஹைதராபாத் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

நிதீஷ் குமார் ரெட்டி 31 ஓட்டங்களையும், ஹென்ரிச் கிளாசன் 27 ஓட்டங்களையும், பெட் கம்மின்ஸ் 22 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 18 ஓட்டங்களை யும் அதிகபட்சமாகப் பெற்ற னர்.

குஜராத் அணி சார்பாக சிராஜ் 4 விக்கெட்டுக்கயும், பிரசித் கிருஷ்ணா, சாய் கிஷோர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

153 ஓட்டங்களை இலக்கா கக் கொண்டு களமிறங்கிய குஜராத் டைட்டன்ஸ் ஆரம் பம் முதலே அதிரடியாக விளையாடியது. 16.4 பந் துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக் களால் வெற்றிபெற்றது குஜராத் டைட்டன்ஸ் அணி. சுப்மன் கில் 61 ஓட்டங்களையும், வொஷிங்டன் சுந்தர் 49 ஓட்டங்களையும், ஷெர்ஃபேன் ரதர்ஃபோர்ட் 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

ஹைதராபாத் அணி சார்பில் பந்துவீச்சில் மொகமட் சமி 2 விக்கெட்டுக்களையும், பட் கம்மின்ஸ் ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர். (எ-இ)




## ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம், ஏப். 7

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று திங்கட்கி ழமை மாலை04 மணியளவில் முதியோர் இல்ல மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. விழா வில் அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி. இரா ஜாம்பாள்பாலசந்திரன்பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

## சித்திரைப் புத்தாண்டு விற்பனைச் சந்தை !

யாழ்ப்பாணம் , ஏப். 7

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும், சமுர்த்தி அபிவி ருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்தும் சித் திரைப் புத்தாண்டு விற்பனைச் சந்தை நிகழ்வு வட மராட்சி கிழக்குப் பிரதேச செயலக சமுர்த்தித் தலை மையக முகாமையாளர் பொ.சுரேஸ்குமார் தலை மையில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செய லாளர் [illegible] பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ச-22,66)



## பயன்பாடற்ற பஸ் தரிப்பிடம் வவுனியாவில் அகற்றம்!

வவுனியா, ஏப்.7

வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் பயன்பாடற்ற நிலையிலிருந்த பேருந்து நிலையம் நகரசபையால் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டது.

பழமையான குறித்த பேருந்துத்தரிப்பிடம் பயன்பா டற்று காணப்பட்ட நிலையில் அதனை அகற்றுமாறு நகரசபைக்கு பல்வேறு தரப்புகளிடமிருந்தும் முறைப் பாடுகளும் கிடைக்கப்பெற்றன. அதற்கமைய இந்தப் பேருந்துநிலையம் அகற்றப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த பகுதிக்கு அண்மையில் பொருத்தமான இடத்தில் புதிய பேருந்துத் தரிப்பிடம் ஒன்றை அமைக்கவுள்ளோம் என்றும் வவுனியா நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## அழுத்தம் கொடுக்குமா இந்தியா?

'இலங்கையில் சமஷ்டியுடனான ஆட்சிமுறையைக் கொண்டுவர இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும்' இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கொழும்பில் சந்தித்த தமிழ்த்தேசியத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை ஒன்றும் புதிதல்ல. எப்போதெல்லாம் இந்தியத்தரப்பை தமிழ்த்தலைவர்கள் சந்திக்கிறார்களோ, அப்போதெல்லாம் இந்தச் சமஷ்டிக் கோரிக்கையை தமிழ்த்தலைவர்கள் முன்வைக்கத் தவறுவதில்லை. இந்தியத்தலைவர்களும் ஒரு புன்சிரிப்போடு 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று அப்போதைக்குச் சமாளித்துக் கடந்துவிடு கிறார்களே தவிர, ஒருபோதும் அழுத்தமேதும் கொடுத்ததில்லை. ஆனாலும் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தர்களாக, தமிழர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் 'சமஷ்டிக்கு அழுத்தம் கொடுங்கள்' என்று இந்தியாவைப் பார்த்துக் கெஞ்சியபடியேதான் உள்ளார்கள்.

உண்மையில் இந்தியா சமஷ்டியை விரும்புகிறதா என்பது கூட கேள்விக்குறியே. ஏனென்றால், இந்தியாவிலும் ஜம்மு–காஷ்மீர், பஞ்சாப், நாகலாந்து, அஸாம், மணிப்பூர் போன்ற பல இடங்களில் தமக்கான சுயநிர்ணயத்தை வேண்டிப் போராட்டங்கள் நடக்கின்றன. ஒருவேளை இலங்கை விடயத்தில் சமஷ்டியை வழங்குமாறு இந்தியா வற்புறுத்தினால், 'முதலில் உங்கள் நாட்டில் போராடுபவர்களுக்கு அதை வழங்கிவிட்டு வாருங்கள்' என்று இலங்கை சொல்லக்கூடும். அதேவேளை தமக்கான சுயநிர்ணயத்தை வேண்டிப் போராடும் மக்கள் கூட்டம், 'இலங்கைக்குப் பரிந்துரைத்த சமஷ்டியை எங்களுக்கு வழங்குவதில் என்ன தயக்கம்? ஊருக்குத்தான் உபதேசமா?' என்று கேட்டாலும் இந்தியா தலைகுனியவேண்டும். எனவே இந்தச் சங்கடங்களைத் தவிர்க்கவே இந்தியாவில் உள்ளதைப்போன்று மாகாணமுறையிலான அதிகாரப்பகிர்வை வழங்க இந்தியா நினைத்தது. ஆனால் இந்த மாகாணசபை முறைமை, இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வல்ல. ஏனெனில் இதுவும் ஒற்றையாட்சியையே வலியுறுத்துகின்றது. மத்திய அரசு என்ன நினைக்கிறதோ அதைத்தான் மாகாணசபை அரசுகளும் செய்தாகவேண்டும். மத்திய அரசின் பொம்மைகளாக மாகாணசபைகள் இயங்குகின்ற இந்தத்தீர்வை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் தீர்வுக்கான ஓர் ஆரம்பப்புள்ளியாக இதனை வைத்துக்கொண்டு, அடுத்தகட்டமாக சமஷ்டி ஆட்சிமுறையை நோக்கிச் செல்லவேண்டும் என்பதே தமிழர்களின் அபிப்பிராயமாக உள்ளது.

1987 இல் ராஜீவ் காந்தி கையெழுத்திட்ட இந்திய'இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வந்த 13'ஆவது திருத்தம், தமிழர்களுக்கு மாகாண சுயாட்சியை வழங்குவதாக உறுதியளித்தது. ஆனால் இன்றுவரை அதுகூட காகிதத்திலேயே உள்ளது. 38 ஆண்டுகளாக தமிழர்கள் காத்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு அந்தத் திருத்தத்தையாவது சீராக, முழுமையாக, நடைமுறைப்படுத்தவேண்டிய வரலாற்றுப் பொறுப்புண்டு. அரசியலமைப்பில் உள்ள ஒரு திருத்தத்தைக்கூட, நடைமுறைப்படுத்த விரும்பாத இலங்கை அரசிடம், சமஷ்டிக்கு இந்தியா என்னதான் அழுத்தம் கொடுத்தாலும், அதை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகமே. என்னதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தம்மை ஜனநாயமான, மாற்றத்தை விரும்பும் அரசாங்கமாகக் காட்டிக்கொண்டாலும் அவர்களும் அடிப்படையில் சிங்கள பௌத்த பேரினச் சிந்தனையில் ஊறித்திளைத்தவர்களே. அதனால் அவர்கள் இந்தியா என்னதான் அழுத்தம் கொடுத்தாலும், பெரும்பான்மையின மக்கள் விரும்பாத எதையுமே நடைமுறைக்குக் கொண்டுவரப்போவதில்லை. எனினும் இலங்கைக்கு வழங்கும் பொருளாதார உதவிகளை வழங்கும்போது, சமஷ்டித் தீர்வுக்கான அல்லது புதிய அரசியலமைப்பின் ஊடான தீர்வுக்கான நிபந்தனைகளை முன்வைக்கலாம். அத்தோடு தமிழர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளராகவோ, மத்தியஸ்தம் வகிப்பவராகவோ செயற்படலாம். இதன்மூலம் ஓரளவுக்காகவேனும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இறங்கிவரலாம். அதேவேளை, இந்தியா மட்டுமே இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்கும், மத்தியஸ்தம் வகிப்பதற்கு பொறுப்பும், தகுதியும் உள்ள நாடென்பதிலும் மாற்றுக்கருத்தில்லை. இந்தியா இல்லாமல் இலங்கையில் ஒருபோதும் அமைதி வரப்போவதில்லை.அதனை இந்தியாவும் உணர்ந்து, தன் வரலாற்றுக் கடமையைச் சரிவர நிறைவேற்றினால், நிச்சயமாக தமிழர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த தீர்வுகிட்டும் என்பதில் ஐயமில்லை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொருநாளும் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்வது அறிவு. ஒவ்வொருநாளும் ஏதாவது ஒன்றை விட்டுவிடுவது ஞானம்.

–எமெர்சன்–




## இந்தியாவுடனான ஒப்பந்தம் நாட்டுக்குச் சிறந்த வாய்ப்பு

### கூறுகிறார் அலி சப்ரி



கொழும்பு, ஏப். 7

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் வருகையானது இருநாடுகளுக்கு இடையிலான உறவில் புதியதொரு அத்தியாயத்தின் தொடக்கத்தைக் காண்பிக்கிறது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2022 ஆம் ஆண்டு இலங்கை மிகத்தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில், மிக அவசியமானதொரு தருணத்தில் இந்தியா எமக்கு உதவ முன்வந்தது. இலங்கையில் ஏற்கனவே இந்திய உதவியுடன் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பின்னணியில், இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் வருகையானது இருநாடுகளுக்கு இடையிலான உறவில் புதியதொரு அத்தியாயத்தின் தொடக்கத்தைக் காண்பிக்கிறது.

நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கு அநாவசியமான அச்சங்கள் களையப்படவேண்டும். இந்தியாவின் எழுச்சி என்பது எமக்கு அச்சுறுத்தல் அல்ல, மாறாக அதுவொரு சிறந்த வாய்ப்பு - என்றார். (ச-இ)

## ரொஷானின் மனைவியிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 7

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் மனைவி தினுஷா ரணசிங்கவிடம் ஊழல் ஒழிப்புப் பிரிவு நேற்றுமுன்தினம் வாக்குமூலம் பதிவுசெய்துள்ளது. போலியாகப் பதிவு செய்யப்பட்ட பாரவூர்தி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா அளித்த வாக்குமூலத்தை அடிப்படையாகக்கொண்டு இவ்வாறு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (ச-இ)

## முட்டை விலை உயர்வு

கொழும்பு, ஏப். 7

சந்தையில் முட்டையின் விலை மீண்டும் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த வாரம் 25 ரூபாவுக்குக் குறைவாகக் காணப்பட்ட முட்டையின் விலை தற்போது 40 ரூபாவாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பண்டிகைக் காலத்தில் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என விற்பனையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)



## வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் பூர்த்தி

கொழும்பு, ஏப். 7

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகர் ப்ரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை தபால்மூல வாக்களிப்புக்காக 7 இலட்சம் தபால் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டன. இன்று 7ஆம் திகதி தொடக்கம் தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ச-இ)

## வருடத்தில் 60,000 பேர் பக்கவாதத்தால் பாதிப்பு

கொழும்பு, ஏப். 7

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 60 ஆயிரம் பேர் பக்கவாதப் பிரச்சினைக்கு ஆளாகின்றனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் விளைவாக, ஆண்டுதோறும் சுமார் 4 ஆயிரம் பேர் உயிரிழக்கவோ, அல்லது முழுமையான உடல் ஊனமுற்ற நிலையிலேயே வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்ட மக்களில் 35 வீதத்துக்கும் அதிகமானோர் உயர்இரத்த அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். (ச-இ)

### நாளை

செவ்வாய்க்கிழமை -பங்குனி- 25

08.04.2025

சுபநேரம் : 10.37- 12.07

ராகுகாலம் : 03.07 - 04.37

ஏகாதசி விரதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிறிபேர்க் கல்லூரியின் 150ஆவது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஏப். 7

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் 150 ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் கல்லூரியின் விசேட அரங்கில் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் தபால் தலை வெளியீடு, சிறப்பு மலர் வெளியீடு, இலக்கிய அரங்குகள், கலை அரங்குகள், கௌரவிப்பு நிகழ்வுகள், பழைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றுகூடல் என்பன இடம் பெறவுள்ளன.

வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள நிகழ்வின் முதலாவது அமர்வில் பிரதம விருந்தினராக கொழும்புத் தபால் தலைமையக துணைத்தபால் மாஸ்டர் ஜெனரல் எச்.எம். பிரேமச்சந்திர ஹெரத், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெரிவ்லியன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அமர்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், கௌரவ விருந்தினராக அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்க உபபோஷகர் பொ.தெய்வேந்திரம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள நிகழ்வின் முதலாவது அமர்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பரீட்சைத் திணைக்கள பிரதி பரீட்சை ஆணையாளர் சி.பிரகாசன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், கௌரவ விருந்தினராக கனடா பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் பொருளாளர் றெஜினால்ட் தேவரஞ்சன் தவரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அமர்வின் பிரதம விருந்தினராக பழைய மாணவியும் முன்னாள் ஆசிரியருமான திருமதி ரதி முருகவேள், சிறப்பு விருந்தினராக பழைய மாணவியும் கொழும்பு சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திருமதி க. நளினி, கௌரவ விருந்தினராக பழைய மாணவரும் தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் தலைவருமான மருத்துவக் கலாநிதி ஆ.புவிநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூன்றாம் நாள், எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கௌரவ விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய தாபனம் மற்றும் பொது முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராஜதுரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து மாலை 4 மணிக்கு பழைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒன்றுகூடல் இடம்பெறும் (ச-41,159)

# 'வெள்ளை ஈ' தாக்கத்தால் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி

## அரசின் நடவடிக்கை என்ன? பசுமை இயக்கத்தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம், ஏப்.7

**தென்னை மரங்களில் பரவிவருகின்ற வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரை அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமையால் தேங்காய் உற்பத்தி பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டுக்குக் கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற தேங்காய் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு உள்ளூரில் நுகரப்பட மூன்றில் ஒரு பாகம் உலர்ந்த தேங்காய்த் துருவல்களாகவும், தேங்காய் எண்ணெய்யாகவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுக்கென ஆண்டுக்கு 4 பில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 3 பில்லியன் தேங்காய்கள் வரையிலேயே அறுவடை செய்யப்படுவதாக தெங்கு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்திவரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவிவருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கம் காணப்படுகின்றது. பெருமெடுப்பில் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தை முன்னெடுத்துவரும் அரசாங்கம் குப்பைகூழங்களையும், சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் அந்தத் திட்டத்தில் உள்வாங்க வேண்டும்.

விரைந்து செயற்படாவிடின் வீட்டினதும், நாட்டினதும் தெங்குப் பொருளாதாரம்மென்மேலும்வீழ்ச்சியடையும் - என்றுள்ளது. (ச-22,66)



சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தின் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற எஸ்.ஆர்.சர்வேந்திரனுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகத் திட்ட மிடல் பணிப்பாளர் இ. சுரேந்திர நாதன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச-22,66)



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இரத்ததானமுகாம் நேற்று கல்லூரி வளாகத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதில் பழையமாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு குருதிக்கொடையளித்தனர். (ச-28)



# புனித அந்தோனியார் கலைக்குழு தேசியரீதியில் இரண்டாமிடம்!

யாழ்ப்பாணம், ஏப். 7

யூபிலி ஆண்டை முன்னிட்டு கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் தேசிய ரீதியாக நடத்தப்படும் வியாகுலப் பிரசங்கம் மற்றும் ஒப்பாரிப் பாடல் ஆகிய போட்டிகளில் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் கலைக் குழு இரண்டாம் இடத்தைப்பெற்றுச் சாதனைபடைத்துள்ளது.

இவர்களுக்கான பரிசில்கள் மற்றும் வெற்றிக்கேடயங்கள் வழங்கும் நிகழ்வு மன்னார் புனித வளனார் திருமறைப்பணி நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-27)

# உற்பத்திகள் ஏற்றுமதி; ஊக்குவிப்பு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப்.7

கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் வடபகுதி உற்பத்தியாளர்களின் பொருள்கள், சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் மாவட்ட மேலதிக செயலர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்திசபையின் மாகாணப் பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனத்தின் நிறைவேற்று அதிகாரி, இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனத்தின் தலைவர் மற்றும் சம்மேளன அங்கத்தவர்கள், தொழிற்றுறை மாகாணப் பணிப்பாளர், கிராமிய அபிவிருத்தி மற்றும் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்கள், வடபகுதிச் சம்மேளனத் தலைவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-22,66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுவாமி யோகநாதனின் சுந்தரக்கோலம்

**சிவயோக சுவாமிகளின் (யோகசுவாமிகள்) 61ஆவது குருபூசை (பங்குனி மாத ஆயிலிய நட்சத்திர நாள்) இன்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரைகள் பிரசுரமாகின்றன.**

இறைவனையே பார்த்துத் தூண் போலிருந்து சுகித்துக்கொண்டிருக்கும் ஞானியர் அச்சமயாதீதப் பழம்பொருளில் சாதி,சமயங்களைக் காண்பதில்லை. இறைவனோடு இலயித்து நிற்கும் நிலையிற் பிரியாமல் உலகத்தைப் பார்க்கும் பொழுது இப்பாவனையான உலகில் சாதி சமயங்களைக் காண்கின்றனர். எங்கள் குருநாதரான சுவாமி யோகநாதன் இன அபிமானம் உடையவர் போன்றும் இன பேதம் கடந்தவராயும், சமயியாகவும் சமயசமரசநிலை பெற்றவராகவும் சமயாதீதராகவும் திகழ்ந்தார்.

எங்கள் குருநாதன் (சுவாமி யோகநாதன்), "தமிழா! விவசாயத்தைச் செய், அன்றேல் சிங்களவனுக்கு அடிமையாவாய்" என்று கூறிய போது அவர் இன அபிமானமுள்ளவர் போல தோன்றுகின்றார்.

"சிங்களவர் எங்களது செல்வம் இந்தச் சீர்
தமிழரும் எங்களது செல்வம்" என்று பாடியபோதோவெனில் சாதிபேதம் யாவும் நீங்கிய பெரியவராகத் திகழ்கின்றார். அவர் இங்கிலாந்துக்குச் சென்ற சிவதொண்டன் தூதுக்குழுவினரிடம் அங்கு பேசவேண்டிய செய்தியைத் தெரிவித்தார். அருள்மொழியில் இரண்டாம் பகுதியில் அச்செய்தி உள்ளது. அது கீழ் வருமாறு:

"இங்கிலாந்தில் பேசவேண்டியது. முன்பு நாங்கள் ஒன்றாகவே இருந்தோம். தற்போது சிலகாலம் வேறுபோல தோன்றினோம். இனியும் ஒன்றுதான்." சாதி பேதமெல்லாம் வெறும் தோற்றம் என்பதும் ஒன்றாகக் காண்பதே உண்மை என்பதும் சுவாமிகளின் தெளிவுக்காட்சி.

நல்லூர் தேர்முட்டிப்படியில் விசர்க்கோலம் பூண்டிருந்த செல்லப்பாசுவாமிகளைப் போன்று சுவாமிகளும் கொழும்புத்துறை இலுப்பை மரத்தடியில் பேய்க்கோலம் பூண்டிருந்ததுண்டு. ஆனால் உலகலத்தவரோடு ஒட்டி வாழ்ந்து ஞானநெறி காட்டத் திருவுளங் கொண்டு கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் குடிபுகுந்த பின்னர் சமயாசாரத்தால் சுந்தரம் பெற்றுத் திகழ்ந்தார். நேர்த்தியாக உடையணிந்தார். ஓமகுண்டத்தில் அவிபாகம் இடுவதுபோல் உணவை உட்கொண்டார். பொழுதுபுலருமுன் எழுந்து தூநீறணிந்து நல்ல மலரெடுத்துத் திருவடிப் பூசை செய்தார். முப்பொழுதும் தொழுதார். ஆலயஞ் சென்றார். நல்லூரானைச் சேவித்தார். செல்வச் சந்நிதியை கை, கால், முகங்கழுவித் தரிசித்தார். தமது அன்பரிடம் சந்நிதித் தலவிருட்சமான பூவரச மரப்பகுதியில் கால்வைக்க இடமில்லாதபடி லிங்கங்கள் நிறைந்துள்ளன என அருளினார். தனது சற்குருவைப் போலவே பன்றித் தலைச்சியம்மன் கோயிலுக்குப் பங்குனி முதற்றிங்கள் தோறும் சென்று பொங்கலிட்டுவந்தார். இந்தியப் புனிதத்தலங்களுக்குப் பல தடவைகள் சென்றார். ஐம்பதுகளில் தமிழினம் பெரும் நெருக்கடிக்குள்ளான போது "இனியொரு வழியுமில்லை கந்தபுராணத்தைப் படியுங்கள்" எனப் பணித்தார். சுவாமியின் பணிப்பின் படி பல இடங்களில் கந்தபுராணப் படிப்புத் தொடங்கி புராணபடனம் முடிந்த இருதினங்களில் விடிவும் ஏற்பட்டது. சிவதொண்டன் நிலையத்திலும் சைவாசாரம் சிறிதும் நெகிழாதிருத்தல் வேண்டுமென எண்ணினார்.

சைவாசாரத்தில் எள்ளளவும் பிசகாத சுவாமி பிறசமயங்களைச் சிறிதும் இகழாதவர். அவரை நாடிப் பல்வேறு சமயங்களையும் சேர்ந்த ஆன்மீக நாட்டங்கொண்டவர்கள் வந்தனர். அவர்களிடம் "உங்கள் சொந்த மார்க்கம் கூறும் வழியிற் செல்லுங்கள்" என அவர் அருளினார். சுவாமியின் சிறந்த பக்தரான நீதியரசர் அக்பர் நோன்பு முதலிய இஸ்லாமிய மார்க்கக் கடமைகளிலே தவறாத முஸ்லிமாகவே விளங்கினார். பௌத்த அன்பர்கள் சிலரும் பௌத்த நெறியில் நின்றுகொண்டே சுவாமியின் பக்தர்களாகத் திகழ்ந்தனர். பெரிய குடும்பப் பாரமான வேலையைச் செய்த ஞானி எனப் புத்தரைச் சுவாமிகள் போற்றுவார். உனது சமயத்திற்குப் புறம்பே செல்லாதே. அதனுள் எல்லாம் உண்டு என அவருக்கு உபதேசித்தார். அவர் தனது சொந்தக் கூட்டிலிருந்து வளரவேண்டும் என்பதே சுவாமிகளின் சித்தம். அவருக்கு அருளிய முதல் வாசகம் "ஆதியில் ஒரு வார்த்தை இருந்தது. அது தேவனோடு இருந்தது. அது தேவனாகவே இருந்தது. அதுவே எல்லாச் சமயங்களினதும் அடிப்படையாகும்" என்பது எல்லாச் சமயங்களினதும் அடிப்படையைக் கிறிஸ்தவ வேதவாக்கின் மூலம் உணர்த்தவே சுவாமி விரும்பியிருக்கிறார். வாய்ப்பாடமாக இருந்த இவ்வாக்கியத்தின் பொருள் சுவாமியின் தரிசனத்தின் பின்னரே விளக்கமாயிற்று என அவர் கூறுவார். இப்பகுதியினை மீண்டும் மீண்டும் உபதேசித்திருக்கின்றார். கிறிஸ்தவ சம்பிரதாயங்களுக்குப் பழக்கப்பட்ட விடயங்கள், சொற்கள் என்பவற்றினூடாகச் சுவாமி அவருக்கு உண்மையை உணர்த்தினார். "நீ உன்னுடைய சொந்தவழியில்தான் செல்லவேண்டும்" என மீண்டும் மீண்டும் உரைத்தார். சுவாமி சமயப் பிரசாரவேலை எதிலும் ஈடுபடவில்லை. தமது அன்பர்கள் ஈடுபடுவதையும் விரும்பவில்லை. நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனத்திலிருந்து திட்டமிட்ட முறையிற் செய்யும் கிறிஸ்தவப் பிரசாரத்தை நோக்கி இளமை முதற்கொண்டே குமுறும் ஓரன்பர் சுவாமியின் சந்நிதானத்திலிருக்கும் பொழுது கீழ்வருமாறு சிந்தை செய்தார். "சுவாமியைப் போன்றவர்கள்தானே கிறிஸ்தவத்தை எதிர்த்து நிற்கவல்ல செயற்றிட்டங்களை அமைத்துத்தரவேண்டும்" என்பதாக அவர் சிந்தை சென்றது. சுவாமிகள் "இங்கே பாரும்! சிவபெருமானை நம்புகிறீரோ? " என வினவினார். அதற்கவர் ஆம் என்றதும், "சும்மா இரும்; எல்லாவற்றையும் அவரே பார்த்துக்கொள்ளுவார்" என அருளினார்.


சமயாசாரசீலம், சமயசமரச நன்னிலை என்னும் இவைகள், இவற்றின் நிறைமுதிர்வில் தாமாய்க் கழன்றுவிழ, எஞ்சிநின்ற சமயாதீத இயல்பு நலத்தால் எழில் பெற்றொளிர்வதே சுவாமிகளின் சுந்தர சொரூபமாகும். இச்சுந்தர சொரூபத்தில் நீறு முதலாய சின்னமேதுமில்லை. மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் கோவிலுக்குப் பங்குனி முதற்றிங்கள் தோறும் பொங்கலிட்டு வருவதைச் சுவாமி ஓர் நற்கருமம் எனக் கொண்டிருந்தார் என்பது முன்னர் கூறப்பட்டது. அவர் சமாதியடைவதற்கு முந்திய ஓரிருநாட்களில் கூட தலையணையின் கீழிருந்து காசுத்தாள்களை எடுத்துக் கொடுத்து நல்லூரானுக்கு அபிஷேகஞ் செய்யுங்கள் என்று அருளினார். ஆனால் அவரது சுந்தர சொரூப நிலையிலோ இத்தகைய பொங்கல் பூசையேதும் இல்லாதனவாய்ப் போயின. ஆசாரக் கட்டெல்லாம் கனவாய்ப் போயின. ஆசாரக் கட்டெல்லாம் கழன்றுவிழச் சுதந்திரனாக நின்ற களிப்பில் சுவாமி சிங்கக்குட்டி போல் கர்ச்சித்த வாசகங்கள் சிலவற்றில் இவ்வேகாந்த எழில் ஒளிர்கிறது.

பங்கு போட்டு வணங்க மாட்டேன்
பொங்கல் பூசை செய்ய மாட்டேன்
சின்னம் ஒன்றும் போட மாட்டேன்

சுவாமி பஞ்சாட்சரத்தை, "நெஞ்சில் துஞ்சாமலே செபி" என்றும் "அகம்பிரமாஸ்மி" என்று அநுதினம் சாதனை செய் என்றும் சொல்லியதுண்டு. "ஓதுக அது நாம் ஓம் தத் சத்" எனும் மந்திரம் அட்சரந்தோறும் நிற்குமாறு அவர் அருமையான மந்திரங்களை அருளியதுமுண்டு. அவர் "வாசியோகந்தேர்" என்றும் கூறினார். ஆனால் அவரது சுந்தரசொரூபமோ அவரது குருபரனைப் போலவே மந்திரமும், தந்திரமும் இல்லாதது. அவர் மந்திரமும் தந்திரமும் மானாபிமானமுமில்லாச் சுதந்தரன். சுவாமியினது நெறி குரு நெறியென்பர். அவர் தம்மைக் குருவடியொரு போதும் மறவாதவன என்றே கூறினார். ஆனால் அவரது உண்மை நிலையோ "குரு வென்றும் சீடனென்றும் கொள்ளவும் மாட்டேன்" என்ற நிலையாகும். சுவாமி ஒரு பொல்லாப்புமில்லை என்னும் மந்திரத்தைப் பற்றியும் ஒன்றும் அறியாதிருந்தவராயிருந்தார் எனக் கூறும் வாசகமே மிகவும் வியப்பாக இருக்கிறது. ஒரு பொல்லாப்புமில்லை என்று ஓரவும் மாட்டேன் என்பது அவ்வாசகம். அவர் ஏறிநின்ற ஓங்கார மேடையில் ஒன்றையும் காணவில்லை. அவர் சமாதியடைவதற்குச் சில நாழிகைகளுக்கு முன் பார்த்த திருவடிப் பூசையின் திருப்பாத தரிசனத்துக்கும் அப்பாலாயிருந்தார்.

"ஆதாரம் ஆதேயம் முழுதுமான அப்பனுக்குப்
பாதார விந்தமெங்கே பார்த்துப் பணிவதெங்கே"
என்று பாடும்போது அவர் திருவடியை வேறாகக் காணாத வெட்டவெளிக்கடலில் மூழ்கித் தானே தானாய்ச் சமைந்து பக்குவமானாரெனத் தெரிகிறது. சுவாமி பக்குவராய் பரமான்மாவாய், போக்குவரவில்லாதவராய் சென்றடையாத திருவாய், ஒழிவறச் சலிப்பற நின்ற நிலையில் அவர் இயமம், நியமம், தவம், செபம், மந்திரம், தந்திரம் யாவும் நீங்கிய சுதந்திரனாய் திகழ்ந்தார். அவர் நேசயோகர், நெறியில்லாதவர், சுத்த பரிபூரணத்தில் சுகித்திருந்தவர். சமயாசாரம், சமயசமரசம், 'சமயாதீதம் எனும் இம் மூன்றும் முரணுறா வகையில் பொருந்தியிருப்பது சுவாமியின் சுந்தரக் கோலத்தின் [illegible]

- [illegible]



## காலத்தால் அழியாத சிவயோக சுவாமிகளின் ஆன்மீகப்பயணம்

■ நந்தன்

ஈழத்திரு நாட்டில் சித்தர் வரிசையில் சிவயோக சுவாமிகளின் ஆன்மீகப்பயணம் காலத்தில் அழியாத வரலாற்றுப் பொக்கிஷம். அத்துடன் சர்வதேசரீதியில் மிகவும் பிரபலமான சித்தராகவும் சிவயோக சுவாமிகள் விளங்குகின்றார். இலங்கைத் திருநாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய மாவிட்டபுரம் எனும் திருக்கிராமத்தில் 1872 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆம் திகதி பிறந்தார். அவரது ஆன்மீக வளர்ச்சி, காலப்போக்கில் நீண்டபயணமாக ஆரம்பித்தது.

குறிப்பாக இலங்கையைச் சுற்றி அவரது ஆன்மீகப்பயணம் ஆரம்பிக்கப்பட்டாலும்கூட கூடுதலாக யாழ்ப்பாணத்தில் வடக்கே அமைந்திருக்கும் கொழும்புத்துறை எனும் கிராமத்தில் அவர் அதிகம் நடமாடினார். யோகசுவாமிகள் நல்லூர் தேரடியில் இருந்து தியானம் செய்துகொண்டிருந்தசமயம் அவ்வழி சென்ற செல்லப்பா சுவாமிகள் யோகசுவாமிகளைப் பார்த்து நான்கு மகா வாக்கியங்களை ஓதி யோகசுவாமிகளின் ஆன்மீகப்பயணத்தை ஆரம்பித்துவைத்தார்.

"ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுவதும் உண்மை"

சிவயோக சுவாமிகளின் இந்த நான்கு மகா வாக்கியங்களுமே இன்று காலத்தால் அழியாத வரலாறுகளாகக் காணப்படுகின்றன. ஆன்மீக வளர்ச்சியடைந்த இவ்வாறான சித்தர் வரிசையில் எமது ஈழத்திருநாட்டில் சிவயோக சுவாமிகள் முதன்மையானவர். யோக சுவாமிகளைச் சந்திப்பதற்குக்கூட உலகில் பல்வேறு பகுதிகளில் இருந்து அதிகமான சித்தர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றுள்ளனர். இவரது ஆன்மீகம், தியானம் போன்றவற்றிற்காக அதிகமான வெளியூர் சித்தர்கள் இவரிடம் தீட்சை பெற்றும் சென்றுள்ளனர். காலப்போக்கில் கொழும்புத்துறைக்குச் சென்ற சுவாமிகள் அங்கே பாரிய விருட்சத்துடன் காணப்பட்ட இலுப்பை மரத்தடியில் இருந்து தியானத்தில் ஈடுபட்டார். பல நாள்களாக இந்த மரத்தடியில் இருந்து நற்சிந்தனைப் பாடல்களைப் பாடியும் தியானத்தில் இருந்த சிவயோக சுவாமிகளை, செல்லப்பா சுவாமிகளும் சந்தித்துவிட்டுச் சென்றார். நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் சுவாமிகளை சந்தித்து வணங்கிச் சென்றனர். சுவாமிகள் தியானவழிபாடுகளை மேற்கொள்வதற்கு இப்பகுதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு என்பவர் கொட்டிலொன்றை அமைத்துக் கொடுத்தார். அந்தக் குடிசையில் சுவாமிகள் தொடர்தியானத்தில் இருந்து கடந்த 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23ஆம் திகதி ஆயிலியம் நட்சத்திரத்தில் மகாசமாதி அடைந்தார். சுவாமிகளுக்கென கொழும்புத்துறையில் திருக்கோவில் கட்டப்பட்டும் அவருக்கு திருவுருவச் சிலை அமைக்கப்பட்டும் வருடா வருடம் அவரது குரு பூஜை அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

சுவாமிகள் சமாதி அடைந்து 61ஆண்டுகள் சென்றாலும் சர்வதேச ரீதியில் சுவாமியுடைய ஆன்மீக ஞானமான சித்திகள், தெய்வ அருள், போன்றவை மறையாவண்ணம் உள்ளன, அவரது குரு பூஜை தினம் ஈழத்திரு நாட்டில் மட்டும் கொண்டாடப்படவில்லை. சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்பட்டும் வருகிறது. கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் அமைந்துள்ள திருக்கோவில் மற்றும் விநாயகர் ஆலயப் பூந்தோட்டத்தில் அமைந்துள்ள திருவதபாத கோவில் போன்றவற்றிற்கு வருடா வருடம் மக்கள் சென்று சுவாமிகளின் குருபூஜைகளில் பக்தி பூர்வமாகவும் கலந்துகொண்டுவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முப்படையினருக்கு தேர்தல் செயலமர்வு


கிளிநொச்சி, ஏப்.7

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் தொடர்பாக அஞ்சல்மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினருக்கான செயலமர்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.முரளிதரன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

செயலமர்வில் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் பொலிஸ் மற்றும் முப்படைகளின் அலுவலர்களின் கடமைகள், பொறுப்புகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சந்தன டி சில்வா, பிரதி ஆணையாளார் கே. ஜே. எஸ். மகாதேவ மற்றும் உதவித்தேர்தல் ஆணையாளர் வே. சிவராசா ஆகியோரால் விளக்கமளிக்கப் பட்டது. (ச-41-113,9)

## மரண அறிவித்தல்

### அமரர் கந்தையா இராசரட்ணம்



தோற்றம் 22.06.1946 | மறைவு 06.04.2025

இருபாலையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராசரட்ணம் அவர்கள் நேற்று (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சமிபிள்ளையின் மகனும், சிவக்கொழுந்து - மனோன்மணியின் மருமகனும், காலஞ்சென்ற இந்திராணியின் அன்புக் கணவரும், விஜிதரன் (இலண்டன்), வசந்தரூபன் (இலண்டன்), ஞானச்செல்வன் (செல்வா) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரி-கந்தசாமியின் சகோதரரும் தயாளதேவி, தவமணிதேவி, சிவகுகன் ஆகியோரின் தாய்மாமனும் காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, சிவலோகநாதன் மற்றும் லோகேந்திரன், வாமதேவன் ஆகியோரின் மைத்துனரும் றஜிதா, சுஜாதா, விதாசுஜி ஆகியோரின் மாமனாரும் கஜானன், கபீசன், கரிசன், சாங்கீர்த்தனா, சாங்கீர்த், சஞ்ஜித், ஹர்சினி, அக்ஷாயினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (07.04.2025) திங்கட்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்



# மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7

மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கவீனமுற்றவர்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு அதுதொடர்பாக ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் சமூக சேவைக் கிளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டது. கலந்துரையாடலில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-28)

# Invitation for Bids - 03/2025
## District General Hospital Kilinochchi
## Furniture & IT Equipments

1. The Chairman, Regional Procurement Committee (RPC) on behalf of the district General Hospital Kilinochchi now invites sealed bids from eligible and qualified bidders for below mentioned items I) Furniture Equipments II) IT Equipments
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure. (NCB)
3. Qualification requirements are indicated in section 4 of the Bidding document Additional details are provide in the schedule/Bidding Data & Contract Data (Section5)
4. Interested eligible bidders may obtain further information from address given below and inspect the bidding documents at the same place on any working days from 07-04-2025 to 21-04-2025 in between 09:00hrs and 15:00hrs
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Director of District General Hospital, A 9 Road, Kilinochchi. (T.P: 021 228 5329, Fax: 021 228 5327) from 09:00hrs to 15:00hrs. During the period from 07-04-2025 to 21-04-2025 upon payment of non refundable fees as mentioned in the table. The method of payment will be paid by cash at District General Hospital Office, Kilinochchi.
6. Bids (Original & Duplicate) should be handed over to the below address or deposited in the tender box available in office at District General Hospital, Kilinochchi.on or before the closing time of bids 11.30AM of 22nd of April 2025. Bids will be opened immediately after closing of bids in the presence of the bidders or their representatives.
7. Prebid meeting will be held on 11/04/2025 at 10.30am at Conference Hall, District General Hospital , Kilinochchi.
8. The Chairman reserves the right to accept or partially accept any bid and to annual the bidding process and reject all bids at any time without there by incurring any liability to the bidders.

| Bid.No | Description | Qty | Non Refundable Fee | Bid Bond | Bid Security Validity up to |
|---|---|---|---|---|---|
| Furniture Equipmnets | | | | | |
| NP/DGH/KOC/2025/ PSDG/01 | Office table wooden | 10 | 1,500.00 | 30,000.00 | 19.07.2025 |
| | Low back revolving chair | 20 | | | |
| | Executive table | 1 | | | |
| IT Equipments | | | | | |
| NP/DGH/KOC/2025/ PSDG/02 | Desktop computer with accessories | 3 | 1,500.00 | 30,000.00 | 19.07.2025 |
| | Printer | 3 | | | |
| | UPS | 15 | | | |
| | Photocopier Machine | 1 | | | |

Further clarifications can be obtained directly from the Accountant of the District General Hospital,Kilinochchi(Tele. No. 021 228 4111 )

Chairman - RPC,
District General Hospital, Kilinochchi.

(cr.44451) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் வரிவிதிப்பால் இலங்கை தள்ளாடும்



## பேராதனைப் பல்கலைப் பேராசிரியர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 7

**அமெரிக்கா விதித்துள்ள புதிய வரி அதிகரிப்பானது இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் ஏற்றுமதியைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய வழிகள் உள்ளன என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது 12 வீதமாகக் காணப்படும் வரியானது 40 வீதத்துக்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிக வரி விகிதங்களைக் கொண்ட முதல் ஐந்து நாடுகளில் இலங்கை அடங்குகின்றது. இந்த நிலைமை இலங்கையின் ஏற்றுமதியில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். இலங்கையின் ஏற்றுமதியில் 25 வீதத்துக்கும் அதிகமானவை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

குறிப்பாக, ஆடைகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தக் கட்டணக் கொள்கை இலங்கையின் ஏற்றுமதியைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய வழிகள் உள்ளன. ஏற்றுமதிகள் இவ்வாறு வீழ்ச்சியடைந்தால், எதிர்காலத்தில் இலங்கையில் ஆடைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏராளமானோரின் வேலைகள் ஆபத்தில் சிக்க வாய்ப்புள்ளன- என்றார். (ச-இ)

## நாமலின் தகைமை சி.ஐ.டி.குடைச்சல்

கொழும்பு, ஏப். 7

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் சட்டத்தரணி தகைமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் இதனைத் தெரிவித்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான குடிமக்கள் அதிகாரம் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த விசாரணை தொடங்கப்பட்டது.

இலங்கை சட்டக் கல்லூரிப் பரீட்சைகளின்போது, நாமல் மோசடியில் ஈடுபட்டாரா என்பது குறித்து விசேட கவனம் செலுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)

## போதைமாத்திரைகளுடன் இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.7

ஆனைக்கோட்டை சாவல் கட்டுப் பகுதியில் போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே 20 மற்றும் 28 வயதுடைய இளைஞர்கள் போதைமாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரில் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மற்றவரை கடுமையாக எச்சரிக்கைசெய்து பிணையில் செல்லவும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-125)

## 7 வருடங்களாக போதைப்பொருள் விற்பனை 24 வயதுடைய யுவதி கைது

கொழும்பு, ஏப். 7

கம்பஹா, யாகொட்ப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அலுமாரியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருளுடன் இளம் யுவதி ஒருவர் மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய யுவதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி டுபாயில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரருக்குச் சொந்தமான போதைப்பொருள்களை தனது வீட்டில் பொதிசெய்து 7 வருடங்களாக விற்பனைசெய்து வந்துள்ளாரென விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட யுவதியின் பெற்றோரும் இந்தப் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எனவும் யுவதி கைதுசெய்யப்பட்டதையடுத்து அவரது பெற்றோர் அப்பகுதியில் இருந்து தப்பிச்சென்றுள்ளனர் என்றும் போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர் தெரிவித்தனர். (ச-இ)

## கசிப்புடன் ஒருவர் ஒட்டுசுட்டானில் கைது

யாழ்ப்பாணம், ஏப்.7

முத்தையன்கட்டு ஜீவநகர்ப் பகுதியில் 1500 மில்லிலீற்றர் கசிப்புடன் ஒருவர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் விசேட ரோந்து நடவடிக்கையின்போது இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

## அஞ்சல் பணியாளர்கள் விடுமுறை இரத்து

கொழும்பு, ஏப். 7

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முன்னிட்டு அஞ்சல் திணைக்கள சேவையாளர்களின் விடுமுறை இன்று திங்கட்கிழமை 7 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 6 ஆம் திகதிவரை இரத்துசெய்யப்பட்டுள்ளதாக அஞ்சல்மா அதிபர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக அஞ்சல் திணைக்களத்துக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்தத் தேர்தலை உரியமுறையில் சட்டரீதியாக நடத்துவதற்காக அஞ்சல் திணைக்களம் பாரிய கடமையை மேற்கொள்ளவேண்டியுள்ளதுடன் தேர்தல் கடமை நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு அவசியமென்பதால் அக்கடமைகளுக்காக சகல உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்கள் முன்னுரிமை வழங்கவேண்டுமெனவும் அந்தக் கடமைகளைப் புறக்கணித்தலைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)




## தேர்தல் ஆணைக்குழுவால் அரச அதிகாரிகள் அழைப்பு

கொழும்பு, ஏப். 7

அரச சொத்துகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைச் செயற்படுத்துவது தொடர்பில் அரசு அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் அடுத்த வாரம் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்பதற்கு அனைத்து அரசு நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## ஜே.வி.பி.யின் கோரமுகம் மக்கள் மறந்துவிடவில்லை

### சோசலிச சமத்துவக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

பட்டலந்த வதைமுகாம் விவகாரத்தை தூசுதட்டும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. அரசு அன்று காட்டிய கோரமுகத்தை நாட்டு மக்கள் இன்றும் மறந்துவிடவில்லை என்று சோசலிச சமத்துவக்கட்சியின் காரைநகர் வேட்பாளர் பரமு திருஞானசம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சோசலிசத்துக்காகப் போராடும் வேலைத்திட்டங்களுக்கு பிரதேசரீதியில் வலுச்சேர்க்கும் வகையில் தான் உள்ளூராட்சிமன்றங்களில் நாம் போட்டியிடுகின்றோம். அநுரவின் கட்சி ஒரு பாசிசவாதம் கொண்ட கொடூரமான கட்சி. இவர்களும் இராணுவத்தைப் பாதுகாக்கவே முற்படுகின்றனர். இதனால் தமிழ் மக்கள் இவர்களிடம் எதனையும் எதிர்பார்க்கமுடியாது - என்றார். (ச-120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ட்ரம்ப் வரிவிதிப்பால்

# ஒரேநாளில் பில்லியன் டொலர் கோடீஸ்வரர்களிடமிருந்து மாயம்

**வொஷிங்டன், ஏப். 7**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரிவிதிப்பால் பில்லியனர்கள் பலரின் சொத்துமதிப்பு ஒரேநாளில் வெகுவாகச் சரிந்துள்ளது.**

பில்லியனர்களின் சொத்து மதிப்பைக் கண்காணிக்கும் 'ப்ளூம் பெர்க்' வெளியிட்டுள்ள தரவுகளின்படி, ஒட்டுமொத்த பில்லியனார் களின் சொத்துமதிப்பு நேற்றுமுன் தினம் மாத்திரம் 208 பில்லியன் டொலர் சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ப்ளூம்பெர்க்கின்' கூற்றுப்படி, இது 13 ஆண்டுகளில் நான்காவது பெரிய சரிவு என்பதுடன் கொரோனாத்தொற்றுக் காலகட்டத்துக்குப் பிறகான மிகப்பெரிய வீழ்ச்சி என்றும் கூறப்படுகிறது.

அதன்படி உலக பணக்காரர்களான பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஜுக்கர்பெர்க் 17.9 பில்லியன் டொலரையும், ஜெப் பெசோஸ் 15.9 பில்லியன் டொலரையும், எலான் மஸ்க் 11 பில்லியன் டொலரையும் ஒரேநாளில் இழந்துள்ளனர்.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வரிக்கு உலக நாடுகள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்து வருவதுடன் உலகெங்கிலும் பங்குச்சந்தையும் ட்ரம்ப் அறிவிப்பால் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 09.03.2025 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பாலகிருஸ்ணன் தணிகைவேள்**

அவர்களின் சிவபேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (08.04.2025) செவ்வாய்க் கிழமை அதிகாலை 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து சபிண்டீகரண கிரியைகள் நடைபெற்று. மதியம் 12.00 மணியளவில் நெல்லைமுருகன் திருமண மண்டபத்தில் (நெல்லியடி) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுப்பிட்டி வீதி,
வதிரி, கரவெட்டி.

குடும்பத்தினர்.
077 988 2160
077 302 4218

(CR 44775) A

மகா சில்க்ஸ்




மாபெரும் மலிவு விற்பனை
மகா சில்க்ஸ்/ கவுஸ் ஒவ் செலெக்ஷன்

புது வருடப் பிறப்பினை முன்னிட்டு

07.04.2025 முதல்
14.04.2025 வரை





கொள்வனவு செய்யப்படும் பொருட்களுக்கு
25%
விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மகா சில்க்ஸ்
பலாலி வீதி
உரும்பிராய் தெற்கு உரும்பிராய்
021 222 7359

கவுஸ் ஒவ் செலெக்ஷன்
பெரிய கடை வீதி
021 222 7675



# ட்ரம்ப் வரிவிதிப்பு திருப்பியடித்த சீனா

பீஜிங், ஏப்.7

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 34 வீத தீர்வை வரியை விதிக்கவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் புதிய வரித் திருத்தம் நடைமுறைக்குவரும் என சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதியினால் சீனப்பொருள்கள் மீது விதிக்கப்பட்ட தீர்வை வரிக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தீர்வை வரியை அதிகரிப்பது தொடர்பான அமெரிக்காவின் தீர்மானம் சர்வதேச வர்த்தக சட்டத்துக்கு முரணானதெனவும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மியான்மர் நிலநடுக்கப் பலி 3000+

நேபிடாவ், ஏப்.7

மியான்மர் நாட்டில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3,003 ஆக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.7 ரிக்டர் அளவில் பதிவான இந்தப் பயங்கர நிலநடுக்கம் தலைநகர் நேபிடாவ், மண்டலே ஆகிய நகரங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

அத்துடன் மியான்மரின் அண்டை நாடான தாய்லாந்திலும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கம் கடும் சேதங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடந்துவருகின்றன. மியான்மரில் இடிந்து விழுந்த கட்டடங்களுக்குள் இருந்து குவியல் குவியலாக உடல்கள் மீட்கப்பட்டுவருகின்றன என அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# வரிகளைக் குறைக்க சலுகைகள் பரிசீலிப்பு

## ட்ரம்ப் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 7

உலக நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வரிகளைக் குறைப்பதற்கான சலுகைகளைப் பரிசீலிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் புதிய வரியை எதிர்நோக்கியுள்ள இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் அமெரிக்காவுடன் பேச்சில் ஈடுபடுவதற்குத் தயாராகி வரும் நிலையில் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். 10 சதவீதம் என்ற அடிப்படையில் புதிய வரி அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சில நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யப்படும் பொருள்களுக்கு 40 சதவீதத்துக்கும் அதிக வரி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் பொருள் களுக்கு 44 சதவீத வரி அறிவிக்கப்பட்டுள்ளதுடன் கம்போடியாவுக்கு 49 சதவீத வரியும், வியட்நாமுக்கு 46 சதவீத வரியும், சீனாவும் 34 சதவீத வரியும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசிக் கொள்வனவில் வர்த்தகர்களே குளறுபடி

## பொறிமுறை வகுக்கவேண்டுமென ஆலை உரிமையாளர்கள் கோரிக்கை

**வவுனியா, ஏப்.7**

**அரிசி ஆலைகளில் நாட்டுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் உள்ளது. ஆனால் குறைந்த இலாபத்தில் அதனைக் கொள்வனவுசெய்து விற்பதற்கு வர்த்தகர்கள் தயாராக இல்லை என்று வவுனியா மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் சி.விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுபோக நெல் வரும்வரை மக்களுக்குத் தேவையான அரிசியை வழங்குவதற்கு நெல் இருக்கின்றது. அரிசி ஆலை உரிமையாளர்களைப் பொறுத்தவரை அரச கட்டளைக்கு உடன்பட்டு அரசின் விலை நிர்ணயத்துக்குக் கொடுப்பதற்குத் தாராளமான அரிசியை கையிருப்பில் வைத்துள்ளனர். தற்போது அரசாங்கத்தால் கூறப்பட்ட கட்டுப்பாட்டு விலையிலிருந்து 5 ரூபாய் குறைத்து வழங்குமாறு கூறப்பட்டதற்கு இணங்க நாம் விநியோகிக்கின்றபோது முன்னைய காலத்தில் ஒரு கிலோ அரிசிக்கு 20, 30 ரூபா இலாபம் வைத்து விற்பனை செய்த சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள் இலாபம் போதாது என கொள்வனவு செய்கிறார்கள் இல்லை. ஆனால் அரிசித்தட்டுப்பாடு. வெளிநாட்டில் இருந்து இறக்கப்போவதாகக் கூறுகிறார்கள். வங்கியில் கடன் எடுத்தே நெல் கொள்வனவு செய்தோம். அந்தக் கடனை 6 மாதத்தில் திருப்பிச் செலுத்தவேண்டும். அதனால் அரிசியை விற்கவேண்டும். அடுத்த சிறுபோக நெல் வருகிறது. இதை விற்றால் தான் சிறுபோக நெல்லை கொள்வனவு செய்யமுடியும். இதை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும். தென்னிலங்கையில் இருந்துவரும் அரிசியை கடைக்குள் ஒளித்துவைத்து 360 ரூபாவுக்கு வர்த்தகர்கள் விற்கிறார்கள். ஆனால் எமது மாவட்டத்தில் உள்ள தேவையான அரிசியை வாங்கிறார்கள் இல்லை. ஆகவே, அரசாங்கம் இதனை ஒரு பொறிமுறைக்குள் கொண்டுவரவேண்டும் - என்றார். (ச-18)

தபால் மூல வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுமுதல் ஆரம்பமாகவுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தபால்மூல வாக்காளர் அட்டை விநியோகத்துக்காக அவற்றை தபால் திணைக்களத்திடம் கையளிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பருத்தித்துறை நகரசபை மற்றும் வேலணை பிரதேசசபை ஆகியவற்றுக்கான தபால்மூல வாக்காளர் அட்டைகளே இன்று விநியோகிக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 21 ஆயிரத்து 64 பேர் தபால்மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில், இன்று 768 தபால்மூல வாக்காளர் அட்டைகளே விநியோகிக்கப்படவுள்ளன. பருத்தித்துறை நகர சபையில் 463 பேரும், வேலணை பிரதேசசபையில் 305 பேரும் தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஏனைய உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக நீதிமன்றங்களின் அறிவுறுத்தல்கள் கிடைத்த பின்னர் அவற்றுக்கான தபால்மூல வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (அ-எ-26)

### 114 சபைகளுக்கு...

ளது. ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் நீதிமன்றத் தீர்ப்புக்கள் தங்களுக்குக் கிடைத்த பின்னர் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியாகபூர்வ வாக்காளர் அட்டைகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்படும். இந்தப் பணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

### மஹாபோதியை...

ஈடுபட்டார். அதன்பின்னர், நவீனமாக்கப்பட்ட மஹவ - ஓமந்தை ரயில் பாதை மற்றும் மஹவ - அநுராதபுரம் ரயில் சமிக்ஞைக் கட்டமைப்பு என்பவற்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் இணைந்து திறந்தனர். (அ-எ-இ)

### இந்தியா...

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேற்றுப் பிற்பகல் அநுராதபுரம் விமானப் படைத் தளத்தில் இருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

"நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு" என்ற எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தியப் பிரதமர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட நான்காவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர், இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்தப் பயணத்தில் இணைந்திருந்தனர். (அ-எ-இ)

### சட்டவிரோத...

சட்டவிரோத மதுபான விற்பனையைக் கட்டுப்படுத்தக்கோரி மாணிக்கபுரம், இளங்கோபுரம், வள்ளுவர்புரம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மாணிக்கபுரம் கிராம அலுவலர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பாதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த மக்கள், சில வீடுகளுக்குச் சென்று கசிப்பு விற்பனையில் ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கை செய்ததுடன், சில வீடுகளின் முன்பாக சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளனர்.

தங்கள் கிராமங்களில் நடக்கும் சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்கக்கோரி கிராம அலுவலர் ஊடாகப் பிரதேச செயலருக்கும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் எழுத்துமூல மனு அனுப்பவுள்ளோம் என்றும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-எ-19)

### போதை...

டுள்ளார். இரகசியத்தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சந்தேநபரை நேற்றுக் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டபோது அவரிடம் 10 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன, கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், ஐந்துசந்திப் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடையவர் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து சந்தேகநபரின் வீட்டில் இருந்து 75 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன என்றும் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-எ-26)

### அமெ. வரிச்...

என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பெரும்பாலான ஏற்றுமதிகள் ஆடைத்துறையில் தங்கியுள்ளதால், அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக் கொள்கையால் நாட்டின் ஆடைத் தொழில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும். இந்த நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும் தொடர்புடைய இறக்குமதி வரிக் கொள்கை பொருந்தும்.

அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிக்கொள்கை மற்றும் அதன் விளைவாக நாட்டைப் பாதித்த பிரச்சினைகள் தொடர்பாக இலங்கைக்கு வந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் அரசாங்கம் ஒரு தீர்வைக் கோரியிருந்தது. அதற்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது - என்றார். (அ-எ-இ)

### இரண்டு...

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளவுள்ளது. தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்தநிலையில்

### 712...

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த முறைப்பாடுகளில் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக 4 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 668 முறைப்பாடுகளும் அடங்கும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

### "அரசியல்...

வாங்கல் என்ற சொல் பல்வேறு சந்தர்ப்பங்களில் தவறான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசியல் பழிவாங்கல் என்ற சொல்லை பயன்படுத்தவேண்டாம் என்று அரசியல்வாதிகளிடம் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல்பழிவாங்கல்என்றசொல்லை பயன்படுத்துபவர்கள் மீது 2023ஆம் ஆண்டு ஊழல் ஒழிப்பு சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (அ-எ-6)

### தே.ம.சக்தி...

தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோசல நுவன் ஜயவீர (வயது-38) மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனமுற்ற அவர் கரவனெல்ல ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். மாரடைப்புக் காரணமாக அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 61 ஆயிரத்து 713 வாக்குகளைப் பெற்று கோசல நுவன் ஜயவீர நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விசார் பிரச்சினைகள் கல்வியமைச்சில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 7
வடமாகாண அதிபர்கள் சங்கப் பிரதிநிதி களுக்கும் வடமாகாண கல்வி அமைச் சின் செயலாளர் மற்றும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை வடமாகாணக்கல்வி அமைச்சில் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் ஆசிரியர் பற்றாக் குறை, சிற்றூழியர் பற்றாக்குறை, பாடசாலைகளுக்கு அதிபர்களை நிய மித்தல் மற்றும் மாணவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்குதல், அதி பர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. நிகழ்வில் வடமாகாண அதிபர்கள் சங்கம் சார் பாக தலைவர் நா.மகேந்திரராசா, செயலாளர் ஜெ.கோகுலவாசன், பொருளாளர் அ.கஜேந்திரன், பிரதித் தலைவர் மா.முருகதாசன், உப செய லாளர் கு.திலீபன் ஆகியோர் பங்கேற் றனர். (ச-41-159)

# குருதிக்கொடை முகாம்



யாழ்ப்பாணம், ஏப். 7
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் நடத்தும் குரு திக்கொடை முகாம் இன்று திங்கட்கிழமை காலை09 மணி முதல் பிரதேச செயலகப் பிர தான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ் வில் குருதிக்கொடையாளர்கள் கலந்து கொள் ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள் ளனர். (ச-66)

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி, சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பின் விலை 12 இலட்சம்.
தொடர்பு: 077 820 9424
(CS 30006) A

**மில் வேலையாள் தேவை**

தெல்லிப்பழை பகுதியில் உள்ள மில் ஒன்றிற்கு மில் வேலை தெரிந்த ஆட்கள் தேவை.
தொடர்பு: 077 135 8337
075 135 8337

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 28 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
  - ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17.000.00)
  - ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15.000.00)
  - ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8.000.00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM. பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM. மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M. மாலு சந்தி 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம். மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி. செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 860 2770
076 987 8617
076 935 3971

# பங்குனி திங்கள் உற்சவம்

சாவகச்சேரி, ஏப்.7
வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டு வில் பன்றித்தலைச்சி கண் ணகை அம்மன் ஆலய வரு டாந்த பங்குனித் திங்கள் உற்சவ நான்காம் திங்கள் பொங்கல் மற்றும் அபிசேக நிகழ்வுகள் இன்று அதிகாலை தொடக்கம் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.
பங்குனித் திங்கள் உற்வசத் தையொட்டி குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர் கள் வருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. உற்வ சத்துக்கு வரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ளவேண் டும் என்றும், உடைமைகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-131)



சாவகச்சேரி நுணாவில் வீரபத்திர விநாயகர் கோவில் வருடாந்த பெருந் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங் கள் நடைபெறவுள்ளன. (ச-9)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
**ஆடைகளின் சாம்ராஜ்யம்**
**இந்தியன் செலக்ஷனின்**
**சித்திரைப் புத்தாண்டு**




இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 05.04.2025 முதல்
சித்திரைப்புத்தாண்டு வரை
(வாரத்தின் 7 நாட்களும்)
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**



நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.